# அருணகிரியாரின் அருள் அறம்

***முனைவர் ப. ஜெயராஜ்***
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*பூசாகோ கலை அறிவியல் கல்லூரி,*
*கோவை*

**முன்னுரை**

பதினைந்தாம் நூற்றாண்டில் சைவம், வைணவம் ஆகிய இரண்டு சமயமும் பிற சமயங்களின் வளர்ச்சியாலும் தாக்கத்தாலும் நிலைகுலைந்திருந்தன. இந்நூற்றாண்டில் தோன்றிய அருணகிரியார் முருக வழிபாட்டின் ஊடாக சைவம், வைணவம், சாக்கதம் ஆகியவற்றை ஒன்றிணைக்கின்றார். தேவார, திருவாசகப், பாக்களால் சைவமும், ஆழ்வார்களின் பிரபந்தங்களால் வைணவமும் எளிய மக்களைக் கவர்ந்தன. ஆனால் இவ்விரு சமயங்களுக்கு இடையிலான போராட்டம் இரண்டு சமயத்தையும் வளர விடாமல் தடுத்தது. சிற்றூர்களில் பக்திநெறி, வழிபாட்டு நெறிகள் சமயப் பேரியாறுகளோடு கலவாமல் தனித்தே இருந்தன. இச்சூழலில் அருணகிரியார் பிளவுப்பட்ட சமயத்தை ஒருங்கிணைத்தார். முருக வழிபாடு, சிவநெறி, வைணவ நெறி, சாக்கதநெறி ஆகிய நான்கையும் ஒன்றிணைத்து எளிய மக்களிடம் கொண்டு செல்வதற்குரிய இசையோடும், தாளலயத்தோடும் அமைந்த சந்தத் தமிழை உரிய கருவியாகக் கொண்ட கந்தரந்தாதி எனும் நூலினைப் பாடினார். அந்நூலில் முருகனின் சிறப்பினைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அருணகிரியார் அருளிய நூல்கள்**

முருகப் பெருமானைப் பாடி வழிபட்ட அருளாளரான நக்கீரருக்கு பின் அறுபடை வீடுகளை பாடியவர் அருணகிரியார் ஆவார். இவரைத் தொடர்ந்து குமரகுருபரர், பகழிக்கூத்தர்,திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள், வள்ளலார், பாம்பன் குமரகுருதாச சுவாமிகள், வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் ஆகியோர் முருகப் பெருமனை வாய் மணக்கப்பாடும் நிலையை அறியலாகிறது. **திருப்புகழ், திருவகுப்பு, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல்விருத்தம், மயில்விருத்தம், சேவல் விருத்தம், திருஎழுகூற்றிருக்கை** ஆகிய நூல்களை அருணகிரியார் அருளியுள்ளார்.

**சமயங்களை ஒன்றுபடுத்துதல்**

சைவம், வைணவம் சாக்கதம் என்று பிளவுபட்டிருந்த தமிழ் மக்களை முருக வழிபாட்டின் மூலம் ஒற்றுமைப்படுத்த அருணகிரிநாதர் முயன்றிருக்கிறார். பல்லவர் கால நாயன்மார் முருக வழிபாட்டைச் சைவத்துடன் இணைக்க முயன்றது போல அருணகிரிநாதர் முருக வழிபாட்டைச் சைவத்துடன் மட்டுமல்லாது வைணவம், சாக்கதம் என்பனவற்றுடனும் இணைக்க முயன்றுள்ளமையை அறியமுடிகிறது.

**“திருமக ளுலாவு மிருபுய முராரி**
**திருமருக நாமப் பெருமான்”**
**“சிவகாமி நாயகர் திருக்குமாரனே”**
**“குறப் பாவையான் மகிழ்தரு வேளே”**

என்னும் கதிர்காமம்,திருகோணமலை என்பன பற்றிய திருப்புகழ்ப் பாக்களால் அறியவியலுகிறது. முருகன் சிவபெருமானுடைய புதல்வன், திருமாலுடைய மருமகன், உமையின் புதல்வன், இலக்குமியின் மருமகன், வள்ளியின் கணவன் முதலிய கருத்துக்கள் கௌமாரம் என்ற முருக வழிபாட்டை முக்கியமான பிற இந்து சமயப் பிரிவுகளோடு இணைக்க உதவியிருக்கும். அருணகிரிநாதர் காலத்திலே தோன்றிய வழிபாட்டு மறுமலர்ச்சியென்ற அலையிலேயே நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தோன்றியிருக்க வேண்டும்”-( தமிழர் சமய வரலாறு, ஆ.வேலுப்பிள்ளை-ப-237-238)என்ற அறிஞர் கூற்றால், தமிழர் சமய வரலாற்றில் அருணகிரியாரால் விளைந்த மாற்றத்தை அறியவியலுகிறது.

அருணகிரிநாதர் பெண்களின் பாற்பெறும் சிற்றின்ப நேயத்தைப் பெரிதும் பாடினாரென்றும், அவர் அவ்வின்பத்துறையில் எளியராய் இருந்தாரென்றும் கூறுவர். அத்தகையோர் கந்தர் அந்தாதியில் இச்செய்யுளைக் காணவேண்டும்.

**"சிகைத் தோகை மாமயில் வீரா சிலம்பும் அம்புரா**
**சிகைத் தோகை மா மய்இல் வாங்கிப் பொருது திசைமுகன் வா**
**சிகைத் தோகை மாமய்சில் வானில் வைத்தோய் வெஞ்செரு மகள்வா**
**சிகைத் தோகை மா மயில் செவ்வி நற்கீரர் சொல் தித்தித்ததே"**

இப்பாட்டின் பொருளாவது கொண்டையையும் தூவியையுமுடைய பெரிய மயிலேறும் வீரனே! கிரவுஞ்ச மலையினையும் ஒலிக்கின்ற கடலிடையே ஒழுங்காக ஓங்கிய கொடியையுடைய மாமரமாய் நின்ற சுரனையும் இருளுக்கு இடமாகிய மாயையினையும் விலக்கிப் போர் செய்து வென்று சினந்து தேவர் உலகத்தை மகிழ்ச்சிக்கு இடமாக ஆக்கியவனே ! கடுமையான போரிற் சிறந்த பாண்டியனின் குதிரை முகத்தை உடைய பெண்ணுக்கு அம்முகத்தை மாற்றி அருள் செய்தவனே ! ஐராவதம் வளர்ந்த தெய்வ யானையின் கல்வி இன்பத்தைவிட நக்கீரர் சொல்லிய திருமுருகாற்றுப்படை உனக்குத் தித்தித்ததன்றோ!என்பதாகும். ''மங்கையொருத்தி தரும் சுகமும் எங்கள் மாத்தமிழுக்கு ஈடில்லை'' என்ற பாரதிதாசனின் கவிதைக் கருத்துக்கு அடிமூலமாக விளங்குவது புலனாகிறது.

வள்ளியைத் திருமணம் செய்து கொடுத்தபோது சீதனப் பொருளாக முருகன் யானைக் கொம்பைப் பெற்றதையும் முருகன் பரசமயநெறிகளுக்கு எட்டாதவனாக இருக்கின்றான் என்பதையும், வள்ளியின் முகத்தைத் தாமரையென்றும் மூக்கை எள்ளினது பூவென்றும் முருகப் பெருமான் முத்தமிழுக்கும் தலைவனாக இருந்த நிலையிலும் முருகப் பெருமானிடம் பணிந்து நின்று பிரவணப் பொருளைக் கேட்டுக் கொண்டான் எனப் பல பாடல்களில் அருணகிரியார் உரைக்கின்றார். சிவபெருமானே "ஐயனே" என முருகனை விளித்ததாகவும் கூறுவர்.

முத்தி பெற விரும்புவோர் ஆன்மா சாக்கிர நிலையில் இருக்கும்போதும் செயலொடுங்கிய துதியாதீத நிலையில் இருக்கும் போதும் என்னை அன்புறப் பார் என முருகனை வழிபட வேண்டுமென்று அருணகிரிப் பெருமான் அறிவுறுத்துகின்றார். முருகனின் திருவருள் என்ற வெளிச்சத்தில் அடியவரின் பொறுமை என்னும் அம்பினால் கோபம் முதலிய விலங்குகள் பட்டுவிடும் என்றும் கூறுகின்றார்.

**கந்தரந்தாதியின் சிறப்பு**

அருணகிரிநாதரின் அந்தாதி மற்ற அந்தாதி நூல்களிலிருந்து சிறப்புடையது. கந்தரந்தாதி வாது புரிந்து தம்புலமை வீறுகாட்டப் பாடியது. சந்த அமைப்பில் அந்தாதித் தொடை அமைய முருகவேளின் பெருமைகளைக் கூறுவது. பல இதிகாச,புராண, தலபுராணச் செய்திகளைக் கொண்டது. திருமால் நான்முகன் எனப் பிறதெய்வங்களின் சிறப்பையும் மொழிவது. சித்தாந்த நெறியில் கௌமார சமயநெறியின் சிறப்புகளை மொழிவது. முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகளின் சிறப்பினை எடுத்தரைப்பது. வள்ளி தெய்வயானை என்னும் இருவரையும் போற்றிப் புகழ்வது. உலக இன்பங்களைவிட உயர்ந்தது எனக் கூறி நிலைநாட்டுவதாக கந்தர் அந்தாதி சிறந்து விளங்குகிறது.

அருணகிரியாரை வில்லிபுத்தூரார் வாதுக்கழைத்த நிலையில் பாடிய நூல் கந்தரந்தாதி என்பர். இந்நூலின் தொடக்க முதல் 53 பாட்டு வரை வில்லிபுத்தூரார் உரை சொல்லி முடித்தாரென்றும் 54 ஆம் பாட்டிற்கு உரை கூறவியலாது தோற்றனரென்றும் கூறுவர். இந்நூல் காப்புச் செய்யுட்கள் இரண்டையும் சேர்த்து 102 செய்யுட்களை உடையது. காப்புச் செய்யுட்களைத் தவிர ஏனையவை சி,சீ,செ,சே, தி,தீ,தெ,தே என்ற எட்டெழுத்துக்களை முதல் எழுத்துகளாகப் பெற்றவை. அந்தாதித் தொடையால் பாடப் பெற்றவை. சந்தம் குறையாமலும் முற்றெதுகையாகவும் பாடப்பெற்றது.

**''திருவாவினன்குடி பங்காளர் எண்முது சீர் உரைத்**
**திருவாவினன்குடி வானார் பரங்குன்று சீரலைவாய்**
**திருவாவினன்குடி ஏரகம் குன்றுதோ றாடல் சென்ற**
**திரு வாவினன்குடி கொண்டதண் கார்வரை செப்புமினே" (கந்தரந்தாதி-1)**

என்னும் பாட்டில் முதலடியில் உள்ள திருவாவினன்குடி என்பதை திரு,ஆவி,நன்,குடி,எனப் பிரித்துத் திருமகளுக்கு ஆவி போன்றவராகிய திருமாலும்,நற்குடிச் சேர்ந்த தேவியைத் தன் பங்கிலே வைத்து ஆடும் பரமசிவனும் எனப் பொருள் கொண்டு தொடர்தல் வேண்டும். முதுசீர் உரை 'திருவாவினன்குடி' எனத் தொடரும் இரண்டாமடிக்குப் பழமையான சிறப்புடைய வேதாகமப் பொருளைச் சொல்லிய சதிர்மிக்க(சதுரப்பாடுடைய)உவாவினனாகிய இளையோன் உறைவிடமாகிய வானவுலகின் எனப்பொருள் அறிந்து உரைத்தல் வேண்டும்.

**முருகனின் வடிவச்சிறப்பு**

இளமை, மணம், அழகு, கடவுள் தன்மை, ஆகிய எல்லாம் ஒருங்கிணைந்த வடிவம் திருமுருகனுடையது. முருகனின் தோற்றங்காண நான்முகன் 'நாலாயிரம் கண்கொடாது போயினனே' என்கிறார் அருணகிரியார். முருகனின் குழந்தைப்பருவம், குமாரப்பருவம், ஆகிய இரண்டும் அலங்கார நூலிற் பாடப் பெற்றுள்ளன.

குழந்தைப்பருவத்தே முருகன் அரையிற் பூட்டிய கிண்கிணியின் ஓசையைப் பதினாறு உலகமும் கேட்டது எனக் கூறும் அவர், முருகன் குமரனாகியச் சூரனோடு போரிட்டமையினையும் கந்தரலங்காரம் எடுத்துக் கூறுகின்றது. முருகனின் சேவடி,பன்னிரண்டு தோள், ஆறிரண்டு கைகள், தண்டைக்கால் என ஒவ்வோர் உறுப்பையும் அதன் பெருமையையும் அருணகிரியார் கந்தரலங்காரத்திற் பாடுகின்றார். அருணகிரியார்க்கு முன்னும் முருகனின் வேல், மயில்,கோழிக்கொடி ஆகியன போற்றிப் புகழப்பட்டிருப்பினும் அருணகிரியாரே மிக விரிவாக அவற்றின் பெருமையைப் பாடியவர் ஆவார். 'வேல் விருத்தம்', 'சேவல் விருத்தம்' எனப்பாடியமை அறியத்தக்கது. கந்தரலங்காரத்திலும் இவற்றின் சிறப்பை விரிவாகப்பாடுகிறார். "வேலும் மயிலும் நினைத்தவர்தம் துயர்தீர அருள்தரு கந்த" என்பது அருணகிரி வாக்கு. இதனால் வேலும் மயிலும் துணை என்று கூறும் பத்திமை மரபு தோன்றியது.

**வேலும் மயிலும் துணை**

வேலையும் மயிலையும் வழிபடும் மரபை வலிமையுறச் செய்தவர் அருணகிரிநாதரே ஆவார். அவரது கந்தரலங்காரத்தில்

**"விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்றா**
**மொழிக்குத் துணைமுரு காஎனும் நாமங்கள் முன்பு செய்த**
**பழிக்குத் துணைஅவன் பன்னிரு தோளும் பயந்ததனி**
**வழிக்குத் துணைவடி வேலும் செங் கோடன் மயூரமுமே" (கந்தரலங்காரம் -70)**

என்று பாடுகின்றார். கடைநாளில் செல்லும் வாழ்க்கைப் பயணத்தில் மரணம் பற்றி அச்சம் எல்லா மனிதருக்கும் ஏற்படும். அப்போது மனிதர் யாரும் துணையாக வர இயலாது.முருகனின் வேலும் மயிலுமே துணையாக விளங்கும் என்பதை பாடல் வழி உணர்த்துகிறார். இதனை,

திருமுருகாற்றுப்படை வெண்பாவும்,

**"வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறை மீட்ட**
**தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி**
**குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்**
**துளைத்தவேல் உண்டே துணை"- (திருமுருகாற்றுப்படை வெண்பா-பா-03)**

என்று முருகனின் வேற்படையின் புகழ் பேசக் காணலாம், வேல்,முருகன், என்பதை முருகன் என்று கருதி வந்ததைப் பழங்கால வழிபாட்டு மரபுலிருந்து அறியப்படுகிறது.இதனை உணர்ந்து அருணகிரியார் வேலைப் பல வகையிலும் புகழ்ந்து போற்றுதலைக் கந்தரலங்காரத்தில் காணமுடிகிறது.

முருகப் பெருமானை வணங்குவதால் பிறவி நோய் அகலும்,மனத்தில் உள்ள அச்சம் என்னும் பிணி நீங்கும்.மரணம்,இறப்புக் குறித்து உள்ளம் நடுங்காது."மரணப்ரமாதம் எமக்கில்லை" என்பது அவரது மொழி. செல்வத்தையும் பிற உடைமைகளையும் பெரிதாக நினைக்காத ஒரு வாழ்வையும், பொன் பொருளால் பெறும் மகிழ்ச்சியையும், மாதராற் பெறும் இன்பத்தையும், அதிகாரப் பெரும்பதத்தால் வரும் களிப்பையும் பொய் என்பதை

**"சுழித்தோடும் ஆற்றிற் பெருக்கானது செல்வம் "என்றும்**
**"பந்தாடும் மங்கையல் செங்கயல் பார்வையில் பட்டு உழலும் சிந்தாகுலம்" என்றும்**
**"வணங்கித் துதிக்க அறியா மனிதருடன் இணங்கிக்**
**குணம் கெட்ட துட்டன்"**

என்றும் உலகோர் இன்பங்களையும் செருக்கையும் களைதல் கடன் என்பதையும் தித்திக் திருக்கும் அமுதாகிய முருகனின் திருவடிகளை நினைந்து உய்யுமாறு கந்தலரங்காரம் மூலம் அருணகிரியார் உணர்த்துகின்றார்.

**முடிவுரை**

அருணகிரியாரின் கந்தர் அந்தாதி, கந்தரலங்கரம் வழி கௌமார சமயத்தின் சிறப்பையும் முருகனின் வடிவச் சிறப்பினையும் முருகனின் வேல் சிறப்பையும் அவரது திருவடிகளின் சிறப்பையும் அவரது பாடல் வழி அறியலாகிறது.

**பார்வை நூல்கள்**

1. அருணகிரிநாதர் - கந்தர் அந்தாதி, பும்புகார் பதிப்பகம், சென்னை
2. ஞானபரம்பரை - வர்த்தமானன் பதிப்பகம், 21, இராமகிருஷ்ணா தெரு, சென்னை-17
3. பத்துப்பாட்டு - கு.வெ. பாலசுப்பிரமணியம், Ncbh வெளியீடு, சென்னை